நாகப்பட்டினம் நகராட்சி

**2020–ம் ஆண்டு மார்ச் மாதம் –31–ம் நாள் செவ்வாய் கிழமை மாலை 4.30 மணியளவில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கையின் தீர்மான நகல்**

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 31.03.2020 | பொருள் எண்.1<br>இந்நகராட்சியின் 2019–2020ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடும் 2020–2021–ம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடும் வரவு செலவு அறிக்கையினை தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 201/2020/பி1 | தீர்மானம் எண். 204<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.03.2020 | பொருள் எண்.2<br>நாகப்பட்டினம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம்–திடக்கழிவு மேலாண்மை பணிக்கு மாநில உயர் மட்ட குழுவின் 7–வது கூட்டம் நாள்.13–08–2018ன் படி நாகப்பட்டினம் நகராட்சிக்கு ரூ.370.20இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண்.22866/பி3/2018 நாள் 23–08–2018ல் இப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகளில் BIO MINING பணியின் குப்பை குவியல்களை அளவீடு செய்து ஆலோசனைக்கான கட்டணம் வழங்கிட இயக்குநர் அண்ணா பல்கலை கழகம் சென்னை அவர்களை கோரியதில் இயக்குநர் அண்ணா பல்கலை கழகம் சென்னை அவர்களின் 09–05–2019 த்ம தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் படி ரூ.3,50,000/–ஜி.எஸ்.டி (18%) ரூ.63000/–ஆக கூடுதல் ரூ.413000/–மட்டும் வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.413000/–இலட்சம் மட்டும் ஆலோசனை கட்டணமாக PMC fee the Director center for Environmental Studies Anna University, Chennai என்ற பெயரில் வங்கி வரவோலையாக வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. திட்டப்பணியின் அவசர அவசியத்தினை முன்னிட்டு நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி மேற்படி தொகையினை அண்ணாபல்கலை கழகத்திற்கு வழங்கிடவும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்ற அங்கீகரிக்கலாம்<br>3. இச்செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ளலாம்<br>ந.க.எண். 4462/2017/இ1 | தீர்மானம் எண்.205<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.03.2020 | பொருள் எண்.3<br>இந்நகராட்சியில் பணிபுரியும் ஆண் பணியாளர்களுக்கு சீருடைக்கான தையற்கூலி ஜோடி ஒன்றிற்கு ரூ.200 வீதமும் பென் பணியாளர்களுக்கு ஜாக்கெட் தையற்கூலி ரூ.40 வீதமும் வழங்கப்பட்டு வருகிறது. அரசாணை எண்.306/நிதி/(PC) துறை நாள்.13–10–2017ன் படி ஆண் பணியாளர்களுக்கு தையற்கூலி ரூ.200 லிருந்து ரூ.400 ஆகவும் பெண் பணியாளர்களுக்கு ரூ.40 லிருந்து ரூ.80 ஆகவும் உயர்த்தி வழங்கிட அரசுஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட அரசாணையின்படி பணியாளர்களுக்கு மேற்கண்டவாறு தையற்கூலியினை உயர்த்திதர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலகக்குறிப்பு: 1. அனுமதி அளிக்கலாம்<br>2. மன்றத்தின் தீர்மான எண்.135 நாள்.30–09–2019ல் தையற்கூலி வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது<br>3. அரசு ஆணை எண்.306/நிதி/(PC) துறை நாள்.13–10–2017மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>ந.க.எண். 1846/2018/எச்2 | தீர்மானம் எண்.206<br>அ, கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.03.2020 | பொருள் எண்.4<br>நாகப்பட்டினம் நகராட்சி ஒடாச்சேரி மற்றும் வெளிப்பாளையம் குடிநீர் பணிமனையில் உள்ள 25 எச்.பி மற்றும் 50 எச்.பி. மோட்டார் பழுது சரி செய்திடும் பணி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொண்டதற்கும் அதற்கான | தீர்மானம் எண். 207<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |

உத்தேச செலவினம் ரூ.24500/—மட்டும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் |

ந.க.எண். ந.க.எண். 1702/2017/இ1

---

31.03.2020

பொருள் எண்.5

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 24—02—2020ம் தேதிய ந.க.எண்.20/செமதொ/2020என எண்ணிட்ட கடிதத்தில் தினதந்தி நாளிதழ் வெளியிடும் தமிழ்நாடு அரசின் மூன்றாண்டு சாதனை மலர் 2020க்கு மூன்றாண்டு சாதனை தொடர்பாக விளம்பரம் செய்திட தெரிவிக்கப்பட்டதன்படி மூன்றாண்டு சாதனையினையினை விளம்பரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.28560/—மட்டும் தினதந்தி நாளிதழுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | இச்செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ளலாம் |

ந.க.எண். 995/2018/இ1

தீர்மானம் எண். 208
அ, கு
அனுமதிக்கப்பட்டது

---

31.03.2020

பொருள் எண்.6

நாகப்பட்டினம் நகராட்சி நம்பியார் நகரில் சிதலமடைந்த புயல் பாதுகாப்பு மையக்கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு 27—02—2020அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோரியவர்களின் விபரங்கள் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | ஏலதாரர்கள் விபரம் | ஏலத்தொகை ரூ |
|---|---|---|
| 1 | பி.குமார் த/பெ.பூபதி மேல திரௌபதி அம்மன் கோவில் வடக்கு தெரு நாகப்பட்டினம் | 13600 |
| 2 | ஜி.சக்திவேல் த/பெ.ஏ.கணபதி முத்துராமலிங்கம் தெரு, வடவூர் நிரத்தினமங்களம், நாகப்பட்டினம் | 14000 |
| 3 | கே.சண்முகநாதன் த/பெ.கருப்பையா எண்.4/40, கண்ணாரத்தெரு, மஞ்சக்கொல்லை, நாகப்பட்டினம். | 13750 |

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மேற்படி பொதுஏலத்தில் கேட்கப்பட்ட திரு.ஜி.சக்திவேல் என்பவரது உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.14000ஐ மன்றம் ஏற்கலாம் |
| | 2 | பொது மக்களின் நலன் கருதி அபாயகரமான மேற்படி கட்டிடத்தினை உடன் இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டியுள்ளதால் நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி இப்பணியின் அவசர அவசியத்தினை முன்னிட்டு கட்டிடத்தினை இடிப்பதற்கு உத்தரவு வழங்கிடவும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம். |

ந.க.எண். 2917/2020/இ1

தீர்மானம் எண். 209
அ, கு
அனுமதிக்கப்பட்டது

---

31.03.2020

பொருள் எண்.7

நாகப்பட்டினம் நகராட்சியின் பொது சுகாதாரப்பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவு பணிகளுக்கு போதுமான பணியாளர்கள் இல்லாத நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25865/பி3/2013 நாள்.20—07—2013ன் படி அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (வழங்கல்) துறை நாள்.30—04—1997ல் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின் படி முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனத்தின் மூலம் 75 எண்ணம் வெளியாட்களை கொண்டு ((Outsourcing ) துப்புரவு பணிகள் மேற்கொள்வதற்கும் பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று உத்தேச செலவினத்தொகை ரூ.115.00 இலட்சம் மதிப்பீட்டில் 27—03—2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் வரப்பெற்ற விபரம் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விபரம் | மதிப்பீட்டு விலை விபரம் |
|---|---|---|---|
| 1 | எம்.எஸ்.ரேன்ஸ் இன்ஜினியரிங் ஒப்பந்தக்காரர், | பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 75 | ரூ.423.50 காசு G.S.T. நீங்கலாக |

தீர்மானம் எண். 210
அ, கு
அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | நாகப்பட்டினம் 611 001 | எண்ணம் தினக்கூலி (Outsourcing) துப்புரவுப்பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிமேற்கொள்ளுதல் | |
| 2 | திரு.ஜே.ஜேசு ஒப்பந்தக்காரர் நாகப்பட்டினம் 611 001. | | ரூ.450.00 காசு G.S.T. நீங்கலாக |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள எம்.எஸ்.ரேன்ஸ் இன்ஜினியரிங் நிறுவனத்தாரால் ரூ.423.50க்கு (G.S.T. நீங்கலாக) கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தை ஏற்க பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் (G.S.T. க்கு உரிய தொகையினை அரசிற்கு செலுத்திட கூடுதல் செலவினத்தொகை உத்தேசமாக 15.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். |
| | 3 | G.S.T. ஐஅரசுக்கு செலுத்திட உத்தேச செலவினத்தொகை ரூ.15.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்காலம் |

ந.க.எண். 520/2020/எச்1

---

31.03.2020

பொருள் எண்.8

நாகப்பட்டினம் நகராட்சி பொது சுகாதாரப்பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் துப்புரவு பணிகளுக்கு போதுமான பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.25865/பி3/13 நாள்.20–07–2013ன் படி அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மன்றும் குடிநீர் (வழங்கல்) துறை நாள்.30–04–1997ல் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின் படி வார்டு எண்கள்.21,27,28,29,30,31,32,33,35 மற்றும் 36களில் 75 தினக்கூலி துப்புரவு பணியாளர்கள் (முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் ) மூலம் துப்புரவுபணிகள் இந்நகர் மன்ற தீர்மான எண்.85 நாள்.28–03–2018 ல் அனுமதிக்கப்பட்டுள்ள படி நாளது தேதி வரை பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் பணியின் ஒப்பந்தகாலம் 31–03–2020 ல் முடிவடைவதால் புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மாவட்ட ஆட்சித்தலைவரால் நிர்ணயம் செய்யப்பட்ட விலைவிகிதத்தின் படி ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.385/– வீதம் என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கிடவும் மேலும் விளம்பர கட்டணம் மற்றும் இதர செலவினங்களை மேற்கொள்வதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.115.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மேற்கண்ட பணிக்கு உத்தேச செலவினதொகை ரூ.115.00 இலட்சத்தை பொது நிதியில் மேற்கொள்வதற்கு G.S.T.18% க்கான தொகையினை பொது நிதியில் வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்காலம். |
| | 2 | பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். |

ந.க.எண். 520/2020/எச்1

தீர்மானம் எண். 211
அனுமதிக்கப்பட்டது

/உண்மை நகல்/

(ஒம்) பி,ஏகராஜ்
ஆணையர் மற்றும் தனிஅலுவலர்